# ஜமாஅத் தேர்தல்களுக்கான விதிமுறைகள்

• வெளியீடு •
நஸாரத் உல்யா
சத்ர் அஞ்சுமன் அஹ்மதிய்யா, காதியான்

# QAWAID JAMA'ATI INTEKHABAT

(in Tamil)

By
Nazarat Ulya
Sadr Anjuman Ahmadiyya Qadian

# ஜமாஅத் தேர்தல்களுக்கான விதிமுறைகள்

**வெளியீடு**
நஸாரத் உல்யா
சத்ர் அஞ்சுமன் அஹ்மதிய்யா, காதியான்
2019

**Tamil Version of**
**Qawaid Jamati Intekhabaat**

# ஜமாஅத் தேர்தல்களுக்கான விதிமுறைகள்


| | | |
|---|---|---|
| **Book Name** | : | Qawaid Jamati Intekhabaat |
| **Compiled By** | : | Nazarat Ulya Sadr Anjuman Ahmadiyya, Qadian |
| **Copies** | : | 500 |
| **Year** | : | 2019 |
| **Translated By** | : | O.M.Muzzammil Ahmad |
| **Printed at** | : | Fazl-e-Umar Printing Press Gurdaspur , Qadian Punjab-143 516 |

# முன்னுரை

சகோதரர்கள் அறிந்திருப்பதைப் போன்று தற்போதைய பொறுப்பாளர்களின் காலக்கெடு 31 மார்ச் 2019 அன்று முடிவடைந்து விடும். எனவே மார்ச் 31-ஆம் தேதிக்குள் சந்தாக்களின் கணக்கை பாக்கியின்றி செலுத்தி புதிய தேர்தல் நடத்தி அனுப்ப வேண்டும். அப்போதுதான் ஏப்ரல் மாதத்தில் ஒப்புதல் அனுப்புவதற்கான நடவடிக்கையை மேற்கொள்ள முடியும். பிறகு அதற்கேற்ப புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்ட பொறுப்பாளர்களிடம் பொறுப்பை ஒப்படைக்கும் நடவடிக்கையையும் மேற்கொள்ள முடியும். இந்தத் தேர்தலுக்கான கால அளவு ஏப்ரல் 2019 முதல் மார்ச் 2022 வரை ஆகும்.

**நாஸிர் அஂஂலா, காதியான்**

**உள்ளூர்அஞ்சுமன்களுக்கான(ஜமாஅத்துகளுக்கான) விதிமுறைகளும் வழிகாட்டல்களும்**

எங்கு சந்தா கொடுக்கின்ற அஹ்மதிகள் மூன்று அல்லது அதை விட அதிகமாக இருக்கின்றார்களோ அங்கு முறைப்படி ஜமாஅத் அமைப்பு நிலைநாட்டப்படுவது அவசியமாகும் என்பதை நினைவில் கொள்ள வேண்டும்.

புள்ளி விபரம் (நபர்களின் எண்ணிக்கை) 10- ஐ விட குறைவாக இருக்குமென்றால் அப்போதும் ஜமாஅத்திற்கென்று ஒரு தலைவரும், பொருளாளரும் கண்டிப்பாக நியமிக்கப்பட வேண்டும்.

இந்தப் பொறுப்பாளர்கள் தேர்தல் மூலமாக நியமிக்கப்பட வேண்டும். பிறகு ஜமாஅத்தின் எண்ணிக்கைக்கேற்ப மற்ற செயலர்கள் நியமிக்கப்பட வேண்டும். ஆனால் எங்கு புள்ளி விபரம் (நபர்கள்) குறைவாக இருக்கிறதோ அங்கு தலைவர் மற்றும் பொருளாளர் நேரடியாகத் தேர்தெடுக்கப்படுவதற்கான (அதாவது Nomination செய்வதற்கான) பரிந்துரையும் செய்யப்படலாம்.

**பொறுப்பாளர்களின் தேர்தல் தொடர்பான சத்ர் அஞ்சுமன் அஹ்மதிய்யாவின் விதிமுறைகள்:**

இந்த விபரத்துடன் உள்ளூர் ஜமாஅத்துகள் தொடர்பான சத்ர் அஞ்சுமன் அஹ்மதிய்யா காதியானின் விதிமுறைகளும் சட்ட திட்டங்களும் கீழே தரப்படுகின்றன:

**விதிமுறை எண் 290:** அஹ்மதிய்யா ஜமாஅத்தின் அமைப்பின் கீழ் அஹ்மதிய்யா ஜமாஅத்தின் நபர்கள் இருக்கின்ற ஒவ்வோர் இடத்திலும் நாஸிர் அஃலா அவர்களின் அனுமதியுடன் ஓர் உள்ளூர் அஞ்சுமன் (ஜமாஅத்) நிலைநாட்டப்படலாம். அதன் உறுப்பினர் உள்ளூர் ஜமாஅத்திலுள்ள வயதுக்கு வந்தவர்கள் அனைவரும் இருப்பார்கள்.

**விதிமுறை எண் 291:** ஜமாஅத்தின் பணிகளை நடத்துவதற்கு பல்வேறு இடங்களில் நியமிக்கப்படுகின்ற

இந்த உள்ளூர் அஞ்சுமன்கள் சத்ர் அஞ்சுமன் அஹ்மதிய்யா, நாஸிர்மார்கள், (தஹ்ரீகே ஜதீது, வக்ஃஃபே ஜதீது ஆகிய கிளை அமைப்பின்) மேலதிகாரிகள் ஆகியோரின் கண்காணிப்பு மற்றும் வழிகாட்டல்களின் கீழ் இருக்கும். மேலும் அந்த அஞ்சுமன்களுக்கு அவை சத்ர் அஞ்சுமன் அஹ்மதிய்யாவின் கிளையாகும் என்ற சான்றொப்பமாக சத்ர் அஞ்சுமன் அஹ்மதிய்யாவின் சார்பாக ஒரு சான்றிதழ் வழங்கப்படும்.

**விதிமுறை எண் 292:** உள்ளூர் ஜமாஅத்திலுள்ள (ஒவ்வோர் ஆண், பெண், வயதுக்கு வந்தவர், வயதுக்கு வராதவர் ஆகிய) அனைவரையும் நியமிக்கப்பட்ட பதிவேட்டில் பதிவு செய்வது கடமையாகும். (நஸாரத் உல்யா சார்பாக அனுப்பப்பட்டுள்ள புள்ளி விபரப் படிவத்தை நிரப்பி உள்ளூர் ஜமாஅத்தில் வையுங்கள். மேலும் ஒரு நகலை நஸாரத் உல்யாவுக்கு அனுப்புங்கள். )

**விதிமுறை எண் 293:** ஜமாஅத்தின் அமைப்பு அல்லது அமாரத்தின் கடமைகளுடன் தொடர்பு கொண்ட விஷயங்களில் உள்ளூர் ஜமாஅத் உறுப்பினர்கள் உள்ளூர் அமீர்/தலைவர் ஆகியோருக்குக் கட்டுப்படுவது அவசியமானதாகும்.

**விதிமுறை எண் 296:** ஒன்றுக்கு அதிகமான இடங்களில் இருக்கும் உள்ளூர் அஞ்சுமன்களை (ஜமாஅத்துகளை) ஒன்று சேர்த்து ஹல்கா அளவிலான (வட்டம் அளவிலான) அல்லது மாவட்ட அளவிலான அல்லது நாடு அளவிலான அஞ்சுமன்களின் அமைப்பாக நிலைநாட்டுவது ஆகுமானதாகும். அப்படிப்பட்ட சூழ்நிலையில் அவற்றில் ஒவ்வோர் அமைப்பும் தனக்கு மேலே உள்ள அமைப்பின்

கீழ் இருக்கும். மேலும் இந்த எல்லா அமைப்பும் மேலிடத்தின் அமைப்பின் கீழ் இருக்கும்.

**விதிமுறை எண் 299:** ஒவ்வோர் உள்ளூர் அஞ்சுமனும் தமது பணிகளின் பல்வேறு அலுவலகங்கள் தொடர்பான தனது நடவடிக்கை பற்றி சம்பந்தப்பட்ட அலுவலகத்திற்கு ஆண்டறிக்கை அனுப்புவது அவசியமாகும். அது மட்டுமின்றி நடப்பு ஆண்டிலும் கேட்பதற்கேற்ப மேலிடத்திற்கு அறிக்கை அனுப்பிக் கொண்டிருக்க வேண்டும். (நஸாரத் உல்யா சார்பாக இருக்கும் மாதாந்திர அறிக்கைப் படிவத்தை முறைப்படி அனுப்புவது அவசியமாகும்.)

**விதிமுறை எண் 300:** ஒவ்வோர் உள்ளூர் அஞ்சுமனும் (ஜமாஅத்தும்) தமது இடத்தில் ஒரு பள்ளிவாயிலையும், படிப்பகத்தையும் நிலைநாட்டும் என நம்பப்படுகிறது.பள்ளிவாயில் இல்லாத நிலையில் உள்ளூர் ஜமாஅத், ஜமாஅத்தின் உறுப்பினர்கள் ஜமாஅத்தான தொழுகை, ஜுமுஆ தொழுகை, மற்ற கூட்டங்கள் ஆகியவற்றிற்காக ஒன்று கூடும் வகையில் ஓர் இடத்திற்கான ஏற்பாட்டைச் செய்வது உள்ளூர் ஜமாஅத்தின் கடமையாகும்.

**விதிமுறை எண் 303:** மேலிடத்திலிருந்து ஒரு நாஸிர் சாஹிப் ஏதாவதோர் இடத்திற்கு சுற்றுப் பயணம் மேற்கொண்டால் (அவர்) கலீஃபத்துல் மஸீஹின் பிரதிநிதி என்ற வகையில் பொருத்தமான கண்ணியத்துடன் அவருக்கு அவசியமான ஏற்பாடுகளை செய்ய வேண்டியது ஒவ்வோர் உள்ளூர் அஞ்சுமனின் (ஜமாஅத்தின்) கடமையாகும்.

## தேர்தல்

**விதிமுறை எண் 304:** சத்ர் அஞ்சுமன் அஹ்மதிய்யாவின் பல்வேறு கிளை அலுவலகங்களின் நோக்கங்கள், குறிக்கோள்களுக்காக உள்ளூர் அளவில் பல்வேறு பொறுப்பாளர்களை நியமிப்பது உள்ளூர் அஞ்சுமனுக்கு அவசியமாகும். இந்தப் பொறுப்பாளர்கள் மேலிடத்தின் கிளை அலுவலகங்களின் வழிகாட்டல்களுக்கேற்ப தத்தமது கிளை தொடர்பாக அமீர் அல்லது தலைவரின் கீழ் பணியாற்றுவார்கள். மேலும் அனைத்து அவசியமான, பொருத்தமான பதிவேடுகளையும் வைப்பார்கள். இந்தப் பொறுப்பாளர்கள் உள்ளூர் அஞ்சுமனின் பொதுக் கூட்டத்தில் தேர்ந்தெடுக்கப்படுவர். பணியின் விதத்தைப் பொருத்து ஒன்றை விட அதிகமான பொறுப்பு ஒரே நபருக்கே கொடுப்பதும் ஆகுமானதாகும்.

**விதிமுறை எண் 306:** உள்ளூர் அஞ்சுமன் தனது பணியின் வசதிக்காக தன் கீழ், ஓர் அமைப்பிற்கான குழுவை நிலைநாட்டலாம். அதன் உறுப்பினர்கள் உள்ளூரிலுள்ள அனைத்து பொறுப்பாளர்களுமாவர். இந்தக் குழுவிற்கு மஜ்லிஸே ஆமிலா (செயற்குழு) என்று பெயர். இந்த குழுவிற்கு தலைவராக உள்ளூர் அமீர்/ தலைவர் இருப்பார்.

**விதிமுறை எண் 307:** உள்ளூர் அஞ்சுமனின் செயற்குழுவுக்கு கீழ்வரும் உறுப்பினர்கள் இருப்பர்:

அமீர்/தலைவர், துணை அமீர்/துணைத் தலைவர், பொதுச் செயலர், இஸ்லாஹோ இர்ஷாது செயலர், (புதிதாக பைஅத் செய்தவர்களுக்கான தர்பிய்யத்திற்காக) கூடுதல் இஸ்லாஹோ இர்ஷாது செயலர்,(தஃலீமுல் குர்ஆன் வக்ஃபே ஆர்ஸீக்காக) கூடுதல் இஸ்லாஹோ இர்ஷாது செயலர், தஃவத்தே இலல்லாஹ் செயலர், கல்விச் செயலர், உள் விவகாரச் செயலர், வெளி விவகாரச் செயலர், வஸிய்யத் செயலர், பொருளாளர், துணைப் பொருளாளர், தஸ்னீஃப் வ இஷாஅத் செயலர், (அதாவது நூல்களை

இயற்றுவது, அவற்றை வெளியிடுவதற்கான செயலர்), (ஒலி, ஒளிக்கான) கூடுதல் தஸ்னீஃப் வ இஷாஅத் செயலர், வேளாண்மைச் செயலர்,தொழில் வாணிபம் தொடர்பான செயலர், விருந்தோம்பல் செயலர், சொத்து உடைமைப் பொருள்களுக்கான செயலர், இமாமுஸ் ஸலாத், காஸீ, தணிக்கைச் செயலர், அமீன், முஹாசிப் (கணக்கர்), தஹ்ரீகே ஜதீது செயலர், வக்ஃபே ஜதீது செயலர்,(புதிதாக பைஅத் செய்தவர்களுக்காக) கூடுதல் வக்ஃபே ஜதீது செயலர், வக்ஃபே நவ் செயலர், திருமண உறவுச் செயலர், ஸயீம்/ஸயீமே அஃலா மஜ்லிஸ் அன்ஸாருல்லாஹ், காயிது மஜ்லிஸ் குத்தாமுல் அஹ்மதிய்யா, ஜமாஅத்தின் முரப்பி (முபல்லிக்).

*குறிப்பு எண் 1:* ஏதாவது ஓர் உள்ளூர் ஜமாஅத்தின் கிளை அமைப்புகளில் ஸயீம்கள் அல்லது ஸயீம்கள் அஃலா அன்சாருல்லாஹ் மற்றும் குத்தாமுல் அஹ்மதிய்யாவின் காயிதுகள் இரண்டு அல்லது இரண்டை விட அதிகமாக இருந்தால் அதற்கு சம்பந்தப்பட்ட கிளை அமைப்பின் தலைவர், உள்ளூர் செயற்குழுவிற்காக ஒரு பிரதிநிதியை தேர்ந்தெடுப்பார். (Nomination செய்வார்).

*குறிப்பு எண் 2:* உள்ளூர் அஞ்சுமனில் இரண்டு அல்லது அதை விட அதிகமாக முபல்லிக் இருந்தால் நாஸிர் அஃலா செயற்குழுவிற்காக ஒரு பிரதிநிதியை நியமிப்பார்.

*குறிப்பு எண் 3:* அமீர்/தலைவருக்கு எவரையும் ஆலோசனைக்காக செயற்குழுக் கூட்டத்திற்கு அழைக்கும் அதிகாரம் உண்டு. ஆனால் அவர் ஓட்டு போட முடியாது.

*குறிப்பு எண் 4:* வஸிய்யத் செயலர் வஸிய்யத் செய்தவராக இருக்க வேண்டும்.

*குறிப்பு எண் 5:* ஜமாஅத் பணிகளில் அதிக முன்னேற்றம் ஏற்பட ஒவ்வொரு கால கட்டத்தின் (Term) தொடக்கத்திலும் அனைத்து மாவட்ட அமீர்கள், உள்ளூர் அமீர்கள் மற்றும் ஜமாஅத் தலைவர்கள் ஆகியோர்களுக்கு துணை பொறுப்பாளர்கள் கண்டிப்பாக நியமிக்க

வேண்டும். துணை பொறுப்பாளராக குறைந்தபட்சம் ஒருவரையோ அல்லது தேவைக்கேற்ப இரண்டு நபர்களையோ நியமிக்கலாம்.

*(கடித எண் WTT 3497/30-8-18)*

**விதிமுறை எண் 308:** அமீர்மார்கள், மற்றும் பிற பொறுப்பாளர்களுக்கான தேர்தல் 3 ஆண்டு காலத்திற்குரியதாகும். ஆயினும் குறிப்பிட்ட நிலைமைகளில் மேலிடத்தின் அனுமதியுடன் இடைப்பட்ட காலத்தில் மாற்றம் செய்வது ஆகுமானதாகும். இந்த தேர்தல் அல்லது நியமனம் எஞ்சிய காலகட்டத்திற்கு உரியதாகும்.

**விதிமுறை எண் 308-A:** ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்களின் வழிகாட்டலுக்கிணங்க;

‘‘இனி வரும் காலங்களில் ஜமாஅத் தலைவர்கள் மற்றும் உள்ளூர் அமீர்கள் இரண்டு முறைக்கு மேல் தொடர்ச்சியாக தேர்ந்தெடுக்கப்பட மாட்டார்கள். ஆனால் இந்த விதிமுறை பிற பொறுப்பாளர்கள் மற்றும் மாவட்ட அமீர்களுக்கு பொருந்தாது.’’

‘‘குறைந்தபட்சம் ஒரு கால கட்டத்திற்கு (Term) பிறகு தான் பெயர் முன்மொழியப்படும்.’’

எனவே எந்தெந்த ஜமாஅத் தலைவர்கள் மற்றும் உள்ளூர் அமீர்கள் 2013 லிருந்து தொடர்ச்சியாக பொறுப்பு வகித்து வருகிறார்களோ அவர்களின் பெயர்கள் 2019 தேர்தலில் முன்மொழியப்படாது.

**விதிமுறை எண் 309:** ஜமாஅத்தின் நலனை அடிப்படையாகக் கொண்டு, (பொறுப்பாளராக இருக்க சாத்தியமான) காலக்கெடுவிலும் உள்ளூர் அமீர் அல்லது ஹல்ஹா (வட்டத்தின்) அமீர் அல்லது மாவட்ட அமீர் அல்லது மாநில அமீர் அல்லது தேசிய அமீர் ஆகியோர் அவரது பதவியிலிருந்து காரணம் கூறாமல் விலக்கி வைக்கப்பட முடியும். மேலும் அதற்கான ஒப்புதலை கலீஃபத்துல் மஸீஹ் அவர்களிடமிருந்து வாங்க வேண்டியது அவசியமாகும். ஆனால் உள்ளூர் ஜமாஅத்

அல்லது நபர்களுக்கு தமது ஆலோசனைகளில் ஒருவரை நீக்குவதற்கான கேள்வி எழுப்ப அனுமதி கிடையாது.

**விதிமுறை எண் 310:** சத்ர் அஞ்சுமன் அஹ்மதிய்யாவின் நாஸிர், துணை நாஸிர், கிளை சந்தாக்களின் மேலதிகாரிகள், தஹ்ரீகே ஜதீதின் வகீல்மார்கள், துணை வகீல்மார்கள், அதன் கிளை சந்தாக்களின் மேலதிகாரிகள், வக்ஃஃபே ஜதீதின் நாஸிம், துணை நாஸிம் ஆகியோர் எந்த உள்ளூர் பதவிக்காகவும் தேர்ந்தெடுக்கப்பட முடியாது. அவ்வாறே காஸியும் வேறு எந்தவொரு பதவிக்கும் தேர்ந்தெடுக்கப்பட முடியாது.

**விதிமுறை எண் 311:**

A. உள்ளூர் தலைவர் உள்ளூர் ஜமாஅத்திலுள்ள பெரும்பான்மையோரின் கருத்துகளின் அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்படுவார்.

B. அதம எண்ணிக்கை (Quorum), கருத்து கூறும் மொத்த நபர்களில் பாதி ஆகும். ஆனால் முறைப்படி அறிவிப்பு செய்த பிறகும் கூட்டத்தில் அதம எண்ணிக்கை நிறைவேறவில்லை என்றால், இரண்டாவது கூட்டத்தைக் கூட்டும்போது அதற்கான அதம எண்ணிக்கை மூன்றில் ஒரு பகுதியாகும்.

**விதிமுறை எண் 313:** பட்ஜெட்டில் இணைந்துள்ள மொத்த நபர்களின் எண்ணிக்கையிலிருந்து பெண்கள், மாணவர்கள் ஆகியோரை நீக்கிய பிறகு, எஞ்சியுள்ள சந்தா பாக்கி வைத்திருப்பவர்கள் உட்பட சந்தா கொடுப்பவர்களின் மொத்த எண்ணிக்கையின்படி அதம எண்ணிக்கை (Quorum) நிர்ணயிக்கப்படும்.

**விதிமுறை எண் 314:** அமீருக்கான தேர்தலின்போது விதிமுறைகளின்படி தேர்தலில் கலந்து கொள்ளும் ஒவ்வொருவருக்கும், இந்த தேதியில் அமீருக்கான தேர்தல் நடக்கும் என்றும் அதற்கான நேரம் இடம் நிர்ணயிக்கப்பட்டுள்ளது என்றும் 15 நாட்களுக்கு முன் எழுத்துப் பூர்வமான அறிவிப்பு சென்றடைய வேண்டும். இந்த அறிவிப்பில் ஒவ்வொருவரிடமிருந்தும் அறிவிப்பைப் பெற்றதற்கான கையொப்பத்தை வாங்க

வேண்டும். தேர்தல் கூட்டத்தில் எவரும் அறிவுப்பூர்வமான காரணமின்றி நேரத்திற்கு முன்னர் தகவல் தெரிவிக்காமல் வராமல் இருப்பது தண்டிக்கத்தக்க குற்றமாகும். எனவே எவராவது எழுத்துப் பூர்வமான இந்த அறிவிப்பு கிடைத்த பிறகு வராமல் இருந்தால் அவரைப் பற்றிய அறிக்கை நஸாரத் உல்யாவுக்கு அனுப்பப்பட வேண்டும்.

**விதிமுறை எண் 317:** ஒவ்வொரு பொறுப்பின் முக்கியத்துவம் மற்றும் கடமைகள் ஆகியவற்றிக்குப் பொருத்தமான முறையில் அதற்கான பொறுப்பாளரை தேர்ந்தெடுக்க வேண்டும். நண்பர்கள் கருத்து தெரிவிக்கும்போது எந்நிலையிலும் தகுதிக்கு முன்னுரிமை கொடுக்க வேண்டும். வெறும் பெயரளவில் நேரமில்லாத அல்லது சோம்பேறியாக இருக்கின்ற, தூய மனப்பான்மை இல்லாத, அல்லது திறமையற்ற அல்லது எவ்விதத்திலாவது தீய முன்மாதிரியைக் கொண்டிருக்கின்ற நபரை தேர்ந்தெடுக்கக் கூடாது.

**விதிமுறை எண் 318:** அதிகமான வேலைப் பளுவின் காரணமாக பணிகளில் எவ்வித தடையும், குறைபாடும் ஏற்படாதிருப்பதற்காக குறிப்பிட்ட கட்டாய சூழ்நிலையினாலன்றி ஒருவருக்கு ஒன்றுக்கு மேற்பட்ட பதவியை ஒப்படைக்க வேண்டாம் என்பதை தேர்ந்தெடுக்கும்போது கவனத்தில் வைத்துக் கொள்ளுங்கள் .

**விதிமுறை எண் 319:** கீழ்வரும் பொறுப்பாளர்களுக்கான பட்டியல் மட்டும் ஒப்புதலுக்காக நஸாரத் உல்யாவிடம் வர வேண்டும்:

அமீர்/தலைவர், துணை அமீர்/துணைத் தலைவர், பொதுச் செயலர், இஸ்லாஹோ இர்ஷாது செயலர், (புதிதாக பைஅத் செய்தவர்களுக்கான தர்பிய்யத்திற்காக) கூடுதல் இஸ்லாஹோ இர்ஷாது செயலர், (தஃலீமுல் குர்ஆன் வக்ஃபே ஆர்ஸீக்காக) கூடுதல் இஸ்லாஹோ இர்ஷாது செயலர், தஃவத்தே இலல்லாஹ் செயலர், கல்விச் செயலர், உள் விவகாரச் செயலர், வெளி விவகாரச் செயலர், வஸிய்யத் செயலர், பொருளாளர், துணைப் பொருளாளர்,

தஸ்னீஃப் வ இஷாஅத் செயலர், (அதாவது நூல்களை இயற்றுவது, அவற்றை வெளியிடுவதற்கான செயலர்), (ஒலி, ஒளிக்கான) கூடுதல் தஸ்னீஃப் வ இஷாஅத் செயலர், விவசாய செயலர், தொழில் வியாபாரம் தொடர்பான செயலர், விருந்தோம்பல் செயலர், சொத்து செயலர், திருமண உறவுச் செயலர், இமாமுஸ் ஸலாத், காஸீ, தணிக்கைச் செயலர், அமீன், கணக்கர்.

*குறிப்பு எண் 1:* ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹிமஹுல்லாஹுத் தஆலா) அவர்கள் ரிஷ்தா நாத்தா (திருமண உறவுச்) செயலர் தேர்தெடுக்கப்படும் முறையை நீக்கி விட்டு அமீர்மார்கள் இந்தப் பணிக்காக பொருத்தமான நபர்களை மேலிடத்திற்கு எழுதி ஒப்புதலை வாங்கி கொள்ளட்டும் என அதிகாரம் வழங்கியிருந்தார்கள்.

*குறிப்பு எண் 2:* கீழ்வரும் பொறுப்பாளர்களுக்கான ஒப்புதலை சம்பந்தப்பட்ட அலுவலகங்களிலிருந்து பெறவும். காஸீ, தஹ்ரீகே ஜதீது செயலர், வக்ஃபே ஜதீது செயலர்,(புதிதாக பைஅத் செய்தவர்களுக்காக) கூடுதல் வக்ஃபே ஜதீது செயலர், வக்ஃபே நவ் செயலர், மஜ்லிஸ் அன்சாருல்லாஹ்விற்கான பொறுப்பாளர்கள். குத்தாமுல் அஹ்மதிய்யாவிற்கான பொறுப்பாளர்கள்.

*குறிப்பு எண் 3:* வஸிய்யத் செயலராக இருப்பதற்கு அவர் வஸிய்யத் செய்தவராக இருப்பது அவசியமாகும்.

**விதிமுறை எண் 321:** முஹஸ்ஸிலீன் என்னும் சந்தா வசூல் செய்பவர்களுக்கு உள்ளூர் ஜமாஅத் ஒப்புதல் வழங்குவது போதுமானது. ஆயினும் அவர்களைப் பற்றி நஸாரத் பைத்துல் மால் ஆமதுக்கு தகவல் அறிக்கை அனுப்ப வேண்டும். பொருத்தமற்ற நியமனமாக இருக்குமென்றால் அதை சீர்திருத்துவதற்காக இது அவசியமானதாகும்.

**விதிமுறை எண் 323:** சந்தா கொடுப்பவர்கள் 40 அல்லது 40 ஐ விட அதிகமாக இருக்கின்ற ஒவ்வோர் உள்ளூர் ஜமாஅத்திலும் உள்ளூர் நபர்களிடம்

ஏற்படுகின்ற சண்டை சச்சரவுகளை நீக்குவதற்காக ஒரு காஸீ (தீர்ப்பளிப்பவர்) நியமிக்கப்படுவது அவசியமானதாகும். அமீர் அல்லது தலைவர் அல்லது வேறு எந்த பொறுப்பாளரும் காஸியின் கடமைகளை நிறைவேற்றுவதற்கு அதிகாரம் பெற்றவராக மாட்டார்.

*குறிப்பு எண் 1:* தேவைக்கேற்ப ஒன்றுக்கு அதிகமான காஸியும் நியமிக்கப்படலாம்.

*குறிப்பு எண் 2:* இந்தியாவிலுள்ள ஜமாஅத்துகளிலும் மாவட்டங்களிலும் காஸீ நியமிப்பது தொடர்பாக ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) ஒரு குழுவை நியமித்துள்ளார்கள். அந்தக் குழு காஸிகளின் பெயர்களை தேர்ந்தெடுத்து ஹுஸூர் அவர்களிடமிருந்து ஒப்புதலை பெறுகிறது.

*குறிப்பு எண் 3:* தேவைக்கேற்ப ஒன்றுக்கு அதிகமான இமாமுஸ் ஸலாத்தும் நியமிக்கப்படலாம்.

**விதிமுறை எண் 324:** ஓர் அமீர் அல்லது வேறு ஏதாவது பொறுப்பாளரின் தேர்தலைப் பற்றி, அதில் யாராவது ஒருவருக்கு சாதகமாக பிரசாரம் செய்யப்பட்டது என்ற முறையீடு கிடைத்து, ஆய்வில் அது சரியானது என நிரூபணமானால் அந்த தேர்தல் ஒன்றுமற்றதாகக் குறிப்பிடப்படும். மேலும் பிரசாரம் செய்தவர்கள் மீது கடுமையாக நடவடிக்கை எடுக்கப்படும். மேலும் இரண்டாவது தேர்தலில்போது அவர்களுக்கு கூட்டத்தில் கலந்து கொள்ள அனுமதி கிடையாது.

**விதிமுறை எண் 325:** பரப்புரை (பிரசாரம்) செய்தல் என்பதில், ஜமாஅத்தின் நபர்களிடம் அல்லது ஒரு நபரிடம் எந்த விதத்திலாவது ஒரு குறிப்பிட்ட நபருக்கு சாதகமாக அல்லது எதிராக கருத்தை உருவாக்க முயற்சி செய்யும் ஒவ்வொரு விஷயமும் அடங்கும். ஆயினும் கூட்டத் தலைவரின் அனுமதியுடன் தேர்தல் கூட்டத்தில் முன்மொழியப்பட்ட நபர்களைப் பற்றி பொருத்தமான சொற்களில் சுருக்கமாகக் கூறலாம். ஆனால் எந்த நபருக்கு எதிராகவும் பேசுவதற்கு அனுமதியில்லை.

**விதிமுறை எண் 326:** எவரும் எந்த பொறுப்புக்காகவும் தனது பெயரை முன்மொழியவும் முடியாது; தனக்கே ஓட்டளிக்கவும் முடியாது என்பதை தேர்தல் நேரத்தில் நினைவில் வைத்துக் கொள்ளுங்கள். தேர்தல் நேரத்தில் ஒருவர் தனக்கே ஓட்டளித்துள்ளார் என்றோ அல்லது பெயரை முன்மொழிந்துள்ளார் என்றோ நிரூபணமானால் அவர் அந்தப் பொறுப்புக்காக தேர்ந்தெடுக்கப்பட்டவராகக் கருதப்பட மாட்டார். அந்த நேரத்தில் அவரிடம் ஏதாவது பொறுப்பு இருந்தால் அதிலிருந்தும் அவர் நீக்கப்பட்டு விடுவார்.

**விதிமுறை எண் 327:** தனது வயதைப் பொருத்தவரை மஜ்லிஸ் அன்சாருல்லாஹ் அல்லது குத்தாமுல் அஹ்மதிய்யாவின் பெயர்ப் பட்டியலில் இணையாத எவரும் எந்தப் பதவிக்காகவும் நியமிக்கப்பட மாட்டார்.

**விதிமுறை எண் 328:** தேர்தலில் கலந்து கொள்கின்ற நபர்கள் ஓட்டு போடுவது கட்டாயமானதாகும். ஓட்டளிக்காமல் இருப்பதற்கு அனுமதியில்லை.

**விதிமுறை எண் 329: கீழ்வரும் நபர்கள் தேர்தல் கூட்டத்தில் பங்கு கொள்ள உரிமை இல்லை:**

A. விதிமுறை எண் 341-ல் விவரித்தபடி, ஒருவருக்கு மேலிடத்தின் ஒப்புதல் இல்லாமல் சந்தா பாக்கி இருந்து அதை நிறைவேற்றாதவர்.

B. பெண்கள்.

C.18 வயதை விட குறைந்த சிறுவர்கள்.

D. ஜமாஅத்தின் சார்பாக தண்டனையின் கீழ் இருப்பவர்கள்.

E. மேலிடத்திற்கான தமது சந்தாக்களை உள்ளூர் ஜமாஅத்தின் அமைப்பை மீறி தனியாக மேலிடத்திற்கு அனுப்புவதில் பிடிவாதம் கொண்டவர்கள்.

F. எவர்களின் செலவுகள் தமது பெற்றோரையோ காப்பாளரையோ சார்ந்திருக்குமோ அத்தகைய மாணவர்கள்.

**விதிமுறை எண் 330:** கீழ்வரும் நபர்கள் பொறுப்பாளர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட மாட்டார்கள்:

A. விதிமுறை எண் 329-ன்படி வாக்களிக்கப்பதற்கு தகுதி இல்லாதவர்கள்.

B. கட்டாயச் சந்தாக்களுக்கான பாக்கிக் தொகையை கொடுக்க முடியாததற்கான அனுமதி பெறுபவர்கள்.

C. விதிமுறைப்படி, வஸிய்யத் விதிமுறை எண் 72-கேற்ப எவர்களுடைய வஸிய்யத், சத்ர் அஞ்சுமன் அஹ்மதிய்யாவின் சார்பாக ரத்து செய்யப்பட்டு விட்டதோ அவர்கள்.

D.சந்தாக்களின் தொகையை சொந்த செலவினங்களுக்காக பயன்படுத்துபவர்.

*குறிப்பு:* ஒருவர் இரண்டாம் முறையாக பொருளாதார முறைகேட்டின் காரணமாக தண்டனை பெற்று பொறுப்பிலிருந்து நீக்கப்பட்டிருந்தால் அவர் ஒருபோதும் பொறுப்பாளராக ஆகவே முடியாது.

**விதிமுறை எண் 341:** சந்தா கொடுப்பவர் என்பதன் கருத்து, எவர்கள் தமது சந்தாக்களை முறைப்படி கொடுத்து வருகிறார்களோ மேலும் அவர்களுக்கு சந்தா ஆம், ஹிஸ்ஸா ஆமது சந்தாக்கள் 6 மாதங்களுக்கு அதிகமாக பாக்கி இருக்காதோ மற்றும் ஜல்ஸா சாலானா சந்தா ஓர் ஆண்டுக்கு அதிகமாக பாக்கி இருக்காதோ அவர்களாவர்.

**விதிமுறை எண் 341-A:** நாஸிர் அல்லது காதிமாக இருப்பவர் தத்தமது கிளை அமைப்பின் சந்தாக்களில் பாக்கி உள்ளவராக இருக்கும் பட்சத்தில் அவர் கிளை அமைப்பின் பொறுப்பாளராகவும் ஆக முடியாது. ஜமாஅத்தின் பொறுப்பாளராகவும் ஆக முடியாது.

*(கடித எண் WTT 2591/2-3-16)*

எனவே ஏப்ரல் 2019 ல் இந்தியாவில் நடக்கவிருக்கும் தேர்தல்களில் ஜமாஅத்தின் கட்டாய சந்தாக்கள் மற்றும் ஜல்ஸா சாலானா சந்தாவைத் தவிர (குத்தாமுல் அஹ்மதிய்யா மற்றும் அன்ஸாருல்லாஹ்) கிளை அமைப்புகளின் சந்தாக்கள் 6 மாதமும் அவ்வாறே கிளை அமைப்புகளின் இஜ்திமா சந்தா ஓர் ஆண்டை விட

அதிகமாக பாக்கி இருக்கும் பட்சத்தில் அவர் ஜமாஅத்தின் எந்தவித பொறுப்பாளராகவும் ஆக முடியாது. எனவே அனைத்து அமீர்கள் மற்றும் தலைவர்கள் இந்த விதிமுறையை கவனத்திற் கொண்டு பொருளாளர்களிடமிருந்து வாக்காளர் பெயர் பட்டியலை தயார் செய்யவும்.

**விதிமுறை எண் 342:** பாக்கி வைத்திருக்கும் எவராவது தனது பாக்கிக் தொகையை செலுத்துவது தொடர்பாக சம்பந்தப்பட்ட அலுவலகத்திலிருந்து காலக்கெடுவைப் பெற்றிருந்தால் அவர் எதுவரை காலக்கெடு வாங்கியிருக்கிறாரோ அதுவரை இந்த நிபந்தனையிலிருந்து அவர் விதிவிலக்கு பெற்றவராக இருப்பார்.

**விதிமுறை எண் 344:** எவர்கள் கட்டாயச் சந்தாக்களுக்கான பாக்கித் தொகைக்கு மன்னிப்பு வாங்கியிருக்கிறார்களோ, 5 ஆண்டுகளுக்குள் முறைப்படி கட்டாயச் சந்தாக்களை நிறைவேற்றியிருக்கிறார்களோ அவர்கள் பொறுப்பாளர்களாக தேர்ந்தெடுக்கப்படுவார்கள் அல்லது நியமிக்கப்படுவார்கள்.

**விதிமுறை எண் 345:** விகிதாச்சாரத்தை விட குறைவாக சந்தா செலுத்த அனுமதி பெற்று சந்தா செலுத்தும் நபர்களுக்கு ஓட்டு போடுவதற்கு உரிமை உண்டு. ஆனால் பதவிக்காக தேர்தெடுப்பதும் நியமிப்பதும் மேலிடத்தின் அனுமதியுடன் நடக்கும்.

**பொறுப்பாளர்களுக்கான ஒப்புதல்:**

**விதிமுறை எண் 346:** மேலிடத்தின் மூலமாக நியமிக்கப்படுகின்ற உள்ளூர் பொறுப்பாளர்களை பதவியிலிருந்து நீக்குவதும் மேலிடமாகும். ஆயினும் அமீர், அவர்களை நீக்குமாறு பரிந்துரை செய்யலாம். அமீர் எந்தவொரு பொறுப்பாளரையும் மேலிடத்திலிருந்து தீர்ப்பு வரும் வரை பணியிடை நீக்கம் செய்வதற்கும் அதிகாரம் உண்டு.

**விதிமுறை எண் 347:** உள்ளூர் ஜமாஅத்தின் தேர்தல், பொறுப்பாளர்களின் நியமனம் ஆகியவற்றை

நாஸிர் அஃலா உள்ளூர் அமீரின் ஆலோசனைக்கேற்ப செய்வார். அவ்வாறே எந்தவொரு காரணத்தினாலும் நாஸிர் அஃலா தேர்தலுக்கான ஒப்புதலை வழங்காமல் இருக்கலாம். அல்லது எந்தவொரு பொறுப்பாளரையும் காரணம் கூறாமல் விலக்கி வைக்க முடியும். மேலும் புதிய தேர்தலுக்கு கட்டளையிட முடியும். விதிவிலக்கான நிலைமைகளில் நாஸிர் அஃலா உள்ளூர் பொறுப்பாளர்களை சுயமாக தேர்தெடுக்கவும் முடியும். (Nomination செய்ய முடியும்).

*முக்கிய குறிப்பு:* சய்யிதுனா ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் காதியானில் *மர்கஸீ இன்திகாப் கமிட்டி* (மேலிட தேர்தல் குழு)வை நியமித்திருக்கிறார்கள். அதன் தலைவர் நாஸிர் அஃலா ஆவார். தலைவர் மற்றும் செயலர்களின் தேர்தலுக்கான ஒப்புதல் இந்தக் குழுவின் மூலமாக வழங்கப்படுகிறது.

**விதிமுறை எண் 350:** எந்த இடத்திலாவது சந்தா பாக்கியுள்ள ஒருவரையே ஏதாவதொரு பதவியில் நியமிக்கப்பட வேண்டியதிருக்கிறதென்றால், அந்த பொறுப்பாளரிடம், தமது பாக்கித் தொகையை பொருத்தமான நியமிக்கப்பட தவணையில் செலுத்தி வருவதாக எழுத்துப்பூர்வமாக உறுதிமொழி வாங்கப்படும். மேலும் அந்தத் தவணைக்கான ஒப்புதலை உள்ளூர் அமீர் அல்லது தலைவர் அல்லது சம்பந்தப்பட்ட அலுவலகத்திலிருந்து வாங்குவது அவசியமாகும். ஆனால் சந்தா பாக்கியுள்ள ஒருவர் தனது பாக்கித் தொகையை நிறைவேற்றுவதற்கு முற்றிலும் இயலாதவராக இருக்கிறார் என்றால் அவர் தமது இயலாமையை சம்பந்தப்பட்ட துறை மூலமாகவே விபரமாக எடுத்துரைத்து கலீஃபத்துல் மஸீஹ் அவர்களிடம் மன்னிப்பு கேட்டுக் கொள்ள வேண்டும்.(வஸிய்யத் செய்தவரைத் தவிர. வஸிய்யத் செய்தவரின் பாக்கித் தொகை மன்னிக்கப்பட மாட்டாது.)

**விதிமுறை எண் 354:** புதிய பொறுப்பாளர்களின் தேர்தல் பற்றிய பட்டியல் அவர்களின் முழு முகவரியுடன்

நஸாரத் உல்யாவுக்கு வர வேண்டும். ஆனால் புதிய பொறுப்பாளர்களின் ஒப்புதலுக்கான தகவல் நஸாரத் உல்யாவிடமிருந்து வராத வரை முந்தைய பொறுப்பாளர்களே பணி செய்து கொண்டிருப்பர்.

## பல்வேறு விஷயங்கள்

**விதிமுறை எண்** 355:

புதிய பொறுப்பாளர்களுக்கு ஒப்புதல் கிடைத்ததும் அவர்கள் பணியின் பொறுப்பை முழுமையான விபரத்துடனும், முழு பதிவேட்டுடனும் (ரிகார்டுடனும்) புதிய பொறுப்பாளர்களிடம் உடனே ஒப்படைத்து விடுவது அவசியமாகும். மேலும் புதிய பொறுப்பாளர்கள் பொறுப்பை ஏற்றுக் கொண்ட பிறகு 2 வாரங்களுக்குள் முந்தைய பொறுப்பாளர்களிடமிருந்து சென்ற ஆண்டின் அறிக்கைகளை வாங்கி சம்பந்தப்பட்ட மேலிடத்து அலுவலகங்களுக்கு அனுப்பி விடுங்கள். இல்லையென்றால் அந்தப் பொறுப்பு பிறகு அவர்கள் மீது விழும்.

**விதிமுறை எண்** 363: ஜமாஅத்துகளில் செயலர்களின் பெயரில் கடிதப்போக்குவரத்து வைத்துக் கொள்ளலாம். அத்தகைய சூழ்நிலையில் அதன் நகல் அமீர்/தலைவருக்கும் கண்டிப்பாக செல்ல வேண்டும்.

**விதிமுறை எண்** 364: உள்ளூர் அமீர்/தலைவர் தமது (ஜமாஅத்தின்) இடத்திலிருந்து வெளியே செல்லும்போது நாஸிர் அஃலாவிடமிருந்து முன் அனுமதி பெறுவது அவசியமாகும். மேலும் தனது பிரதிநிதியை நியமிக்கச் செய்ய வேண்டும்.

**பிரதிநிதியை நியமிப்பது தொடர்பான முக்கிய வழிகாட்டல்கள்:**

மாவட்ட அமீர்கள், உள்ளூர் அமீர்கள் மற்றும் ஜமாஅத் தலைவர்கள் ஆகியோர்களுக்கான பிரதிநிதிகளை நியமிப்பது தொடர்பாக இந்திய ஜமாஅத்துகளுக்கு ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்கள் கீழ்வரும் வழிகாட்டல்களை வழங்கியுள்ளார்கள்:-

1. மாவட்ட அமீர் மற்றும் உள்ளூர் அமீர் ஒருவார

காலத்திற்கு உள்நாட்டில் விடுப்பு எடுக்க விண்ணப்பித்தால் நாஸிர் ஸாஹிப் அஃலா காதியான் அவர்கள் அந்த அமீருக்கு பிரதிநிதியை நியமிக்க இயலும். உள்நாட்டில் ஒருவாரத்திற்கு மேலாக விடுப்பில் செல்வதாக இருந்தால் அதற்கு காலத்தின் கலீஃபாவிடம் ஒப்புதல் பெற வேண்டும். ஆனால் ஒரு வாரத்திற்கு குறைவாகவோ அல்லது அதிகமாகவோ வெளிநாட்டிற்கு விடுப்பு எடுத்து செல்வதாக இருந்தால் இந்த இரு நிலைகளிலும் முன்னர் நடைமுறையில் இருந்து வருவது போன்று காலத்தில் கலீஃபாவிடமிருந்து பிரதிநிதியை நியமிப்பதற்கான ஒப்புதல் பெற வேண்டும்.

2. ஜமாஅத் தலைவர்கள் உள்நாட்டிலோ அல்லது வெளிநாட்டிற்கோ விடுப்பு எடுத்து செல்வதாக இருந்தால் அவரின் பிரதிநிதிற்கான ஒப்புதலை நாஸிர் ஸாஹிப் அஃலா வழங்குவார்கள். இதற்காக சம்பந்தப்பட்ட தலைவரின் செயற்குழுவிலிருந்து சில மூத்த உறுப்பினர்களின் பெயர்கள் நாஸிர் அஃலாவிடம் அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

*குறிப்பு:* வட இந்திய ஜமாஅத்துகளுக்கு நாஸிர் ஸாஹிப் அஃலாவும் தென் இந்திய ஜமாஅத்துகளுக்கு அடிஷனல் நாஸிர் ஸாஹிப் அஃலாவும் ஒப்புதல் வழங்குவார்கள்.''

*(கடித எண் WTT 3714/21-4-16)*

## அமாரத்திற்கான அமைப்பு

சய்யிதுனா ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் இந்திய ஜமாஅத்துகளில் அமாரத்திற்கான அமைப்பை நிலைநாட்டுவதற்காக கீழ்வருமாறு வழிகாட்டல் வழங்கியிருக்கிறார்கள்:

'' அமாரத் தேர்தலுக்கான குறைந்த தகுதி இனி 40 என்பதற்கு பதிலாக 50 சந்தா கொடுப்பவர்களின் எண்ணிக்கையாகும். இது மருத்துவர்கள், ஆசிரியர்கள், வழக்கறிஞர்கள் ஆகியோர் பற்றிய மற்ற விபரங்கள் பொருத்தமான எண்ணிக்கையில் முழுமையாக இருக்கும் பட்சத்தில் ஆகும்.''

*(கடித எண்: QDN-0314/06-02-2008)*

இந்த வழிகாட்டலுக்கேற்ப சில ஜமாஅத்துகளின் புள்ளி விபரங்கள் மற்றும் அறிக்கையை ஹுஸூர் அவர்களிடம் எடுத்து வைத்தபோது இன்னும் அதிகமான சில ஜமாஅத்துகளில் அமாரத்திற்கான அமைப்பை நிலைநாட்டுவதற்கு ஒப்புதல் வழங்கியிருந்தார்கள். இதன்படி 2010-ஆம் ஆண்டு அந்த ஜமாஅத்துகளில் அமாரத்திற்கான தேர்தல் நடைமுறைப்படுத்தப்பட்டது.

**********

## அமாரத்துக்கான தேர்தல்
## தேர்தல் கூட்டத்தின் மூலமாக நடைபெறும்

**விதிமுறை எண் 331:** அமீர், செயலர்கள், முஹாஸிப் (கணக்கர்), ஆடிட்டர் (தணிக்கைச் செயலர்) ஆகியோருக்கான தேர்தல் நேரடியாக தேர்ந்தெடுக்கப்பட மாட்டாது. மாறாக, ஒரு தேர்தல் குழுவின் மூலமாக தேர்ந்தெடுக்கப்படும். அதன் உறுப்பினர்களை சந்தா கொடுப்பவர்கள் விதிமுறைகளுக்கேற்ப தேர்ந்தெடுப்பார்கள்.

✸ சந்தா கொடுப்பவர்களின் எண்ணிக்கை 50-லிருந்து 100 வரை இருக்குமென்றால் தேர்தல் குழுவின் உறுப்பினர்களின் எண்ணிக்கை 11 ஆக இருக்கும். இதற்குப் பிறகு ஒவ்வொரு 25 பேர் அதிகமாகும்போது ஒரு நபர் சேர்த்துக் கொள்ளப்படுவார். அதாவது சந்தா கொடுப்பவர்களின் எண்ணிக்கை 200 ஆக இருக்குமென்றால் 15 பேர் தேர்தல் குழுவுக்காக தேர்ந்தெடுக்கப்படுவர். மேலும் இந்த எல்லா உறுப்பினர்களும் 60 வயதுக்குட்பட்டவர்களாக இருப்பர்.

✸ 60-ஐ விட அதிகமான வயதைக் கொண்டவர்களும், பைஅத் செய்து குறைந்தது 10 ஆண்டுகள் ஆகியிருக்கின்றவர்களுமான சந்தா கொடுப்பவர்கள். இவர்களின் எண்ணிக்கை 60-ஐ விட குறைந்த வயதைக் கொண்ட உறுப்பினர்களின் எண்ணிக்கைக்கு சமமானதாக இருக்கிறதென்றால் அவர்கள் தேர்தெடுக்காமலேயே தேர்தல் குழுவிற்கான உறுப்பினர்களாகி விடுவர். அவர்கள் அதிகமாக இருக்கும் நிலையில் 60-ஐ விட குறைந்த வயதைக் கொண்ட உறுப்பினர்களின் அதே உறுப்பினர்கள்தான் தேர்தல் மூலமாக தேர்ந்தெடுக்கப்படுவர். அதாவது சந்தா கொடுப்பவர்களின் எண்ணிக்கையைப் பொருத்தவரை 60-ஐ விட குறைந்த வயதைக் கொண்ட உறுப்பினர்கள்

15 பேராக இருக்கும் நிலையில் 60-ஐ விட அதிக வயதைக் கொண்ட சந்தா கொடுப்பவர்களின் எண்ணிக்கை 20 அல்லது 25 ஆக இருக்குமென்றால் அவர்களிலிருந்தும் 15 உறுப்பினர்களே தேர்ந்தெடுக்கப்படுவார்கள். மேலும் அந்த தேர்தலில் சந்தா கொடுக்கும் அனைவரும் பங்கு பெறுவார்கள். அதாவது 60-ஐ விட குறைந்த வயதைக் கொண்ட சகோதரர்கள், 60-ஐ விட அதிக வயதைக் கொண்ட சகோதரர்கள் ஆகியோரின் பெயர் தனித்தனியாக எடுத்து வைக்கப்படும். ஆனால் தேர்தலில் ஓட்டு போடும்போது வருகை தந்துள்ள அனைவரும் தேர்தலில் பங்கு பெறுவார்கள்.

*குறிப்பு எண் 1:* சந்தா கொடுப்பவர்களில் ஓட்டு போடுகின்ற,பொறுப்பில் தேர்ந்தெடுக்கப்படுகின்ற தகுதி சதாரத்திற்கான (தலைவருக்கான) தேர்தலுக்குரிய விதிமுறைகளில் குறிப்பிடப்பட்டுள்ள அதே நிபந்தனைகளே ஆகும். (அதாவது விதிமுறை எண்: 329,330 மற்றும் 341-345)

*குறிப்பு எண் 2:* உள்ளூர் அமாரத்தின் கீழ் இருக்கும் ஹல்காவிற்கான (வட்டம்) தேர்தல் நஸாரத் உல்யாவின் கண்காணிப்பில் நடைபெறும். அந்த வட்டத்தின் சத்ர் மற்றும் செயற்குழு உறுப்பினர்களுக்கான ஒப்புதலை நாஸிர் ஸாஹிப் அ°°லா வழங்குவார்கள்.

**விதிமுறை எண் 333:** தேர்தல் குழு உறுப்பினர்களின் எண்ணிக்கை பட்ஜெட்டில் குறிப்பிடப்பட்டுள்ள எண்ணிக்கைக்கேற்ப உறுதி செய்யப்படும்.

**விதிமுறை எண் 334:** தேர்தல் குழு 3 ஆண்டுகளுக்காக இருக்கும். அதற்காக நியமிக்கப்பட்டுள்ள எண்ணிக்கையை சந்தா கொடுப்பவர்களின் எண்ணிக்கைக்கேற்ப முழுமையாக வைத்திருப்பது உள்ளூர் ஜமாஅத்திற்கு கட்டாயமானதாகும்.

✸ தேர்தல் குழு உறுப்பினர்களுக்கான ஒப்புதல்

விவகாரம் சத்ர் அஞ்சுமன் அஹ்மதிய்யா காதியான் சார்பாக ஹுஸூர் அவர்களுக்கு அனுப்பி வைக்கப்படும். மேலும் (அந்த தேர்தல் குழுவிற்கான) ஒப்புதலுக்குப் பிறகு அமீர் மற்றும் மற்ற பொறுப்பாளர்களின் தேர்தல் நடக்கும்.

**விதிமுறை எண் 336:** தேர்தல் குழுவிற்காக தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களின் பட்டியலுடன் தேர்தல் குழுவிற்கான விபரமான அறிக்கை நஸாரத் உல்யாவுக்கு ஒப்புதலுக்காக அனுப்பப்படும்போது அதில் தேர்தல் குழுவிற்காக தேர்ந்தெடுக்கப்பட்ட அனைத்து உறுப்பினர்கள், கூட்டத்தில் கலந்து கொண்டவர்கள் ஆகியோரின் கையெழுத்து அல்லது கைரேகை மற்றும் அவர்களின் முழுமையான முகவரிகள் ஆகியவற்றைக் குறிப்பிடுவது அவசியமாகும்

**விதிமுறை எண் 337:** தேர்தல் குழுவிற்கான தலைவர், தேர்தல் குழு உறுப்பினர்களில் வருகை தந்தவர்களின் அதிகப்படியான கருத்திற்கேற்ப நியமிக்கப்படுவார்-அந்த நோக்கத்திற்காக நாஸிர் அஃலா சார்பாக எவராவது பிரதிநிதியாக நியமிக்கப்பட்டாலேயொழிய.

**விதிமுறை எண் 338:** தேர்தல் குழுவின் எந்த ஓர் உறுப்பினராவது மரணமடைந்தாலோ, இடமாற்றம் செய்தாலோ, தொண்டு செய்வதிலிருந்து மன்னிப்பை வேண்டியிருந்தாலோ அல்லது வேறு ஏதாவது காரணத்தினால் இந்த (தேர்தல்) குழுவிற்கான உறுப்பினராக இல்லாவிட்டால் அது பற்றிய தகவலை நாஸிர் அஃலாவுக்கு உடனே தெரிவிப்பது அவசியமாகும். (பிறகு நாஸிர் அஃலாவின் அனுமதியுடன் மாற்று உறுப்பினர் தேர்ந்தெடுக்கப்பட்டு ஒப்புதல் பெற வேண்டியது வரும்.)

**விதிமுறை எண் 339:** தேர்தல் குழுவிற்கான தேர்தல் மொத்த உறுப்பினர்களின் ஒட்டுமொத்தமான எண்ணிக்கையில் பாதி நபர்கள் வருகை தரும்போது நடைபெற முடியும்.

**விதிமுறை எண் 340: அமீர்மார்களின் தேர்தலில் கீழ்வரும் விஷயங்களை குறிப்பாக கவனத்தில் வைத்துக் கொள்ளுங்கள்:**

A.குறைந்தது 4 பெயர்கள் முன்மொழியப்பட வேண்டும்.

B.தொடர்ச்சியாக இரண்டு முறை தேர்ந்தெடுக்கப்பட்ட உள்ளூர் அமீரின் பெயர் மூன்றாவது முறையாக முன்மொழியப்படாது.

*(திருத்தம், ஹுஸூர் அவர்களின் கடித எண் WTT 1033/15-3-2017)*
*(விதிமுறை எண் 308-A)*

C. ஒவ்வொரு நபருக்கும் 3 ஓட்டு போடுவதற்கு உரிமை உள்ளது. (இன்னும் சொல்லப்போனால் அது அவசியமாகும்).

D. ஒவ்வொரு பெயரிலும் பெறப்பட்ட ஓட்டுகள் விபரமாக குறிப்பிடப்பட வேண்டும்.

E. ஒவ்வொருவரின் பைஅத் செய்த ஆண்டு, கல்வித் தகுதி, வயது, தொழில், ஜமாஅத்திற்காக சென்ற காலத்தில் அவர் செய்த தொண்டுகள் ஆகியவை குறிப்பிடப்பட வேண்டும்.

**விதிமுறை எண் 348:** அமீர்மார்கள், துணை அமீர்மார்கள் ஆகியோருக்கான தேர்தல் அல்லது நியமனத்திற்கான ஒப்புதலை நஸாரத் உல்யா (சத்ர் அஞ்சுமன் அஹ்மதிய்யா காதியான் மூலமாக) கலீஃபத்துல் மஸீஹ் அவர்களிடமிருந்து வாங்கும்.

(அதாவது தேர்தல் குழுவின் மூலமாக தேர்ந்தெடுக்கப்படும் அமீர் மற்றும் துணை அமீர் ஆகியோருக்கான ஒப்புதலை கலீஃபத்துல் மஸீஹ் அவர்கள் வழங்குவார்கள்.)

செயற்குழுவின் மற்ற உறுப்பினர்களுக்கான ஒப்புதல் மேலிட தேர்தல் குழுவின் மூலமாக வழங்கப்படும்.

(அவ்வாறே ஜமாஅத்துகளின் தலைவர்களுக்கான

மற்றும் அவர்களின் செயற்குழுவிற்கான ஒப்புதலும் நஸாரத் உல்யா சார்பாக வழங்கப்படும்.)

**விதிமுறை எண் 352:** தேர்தலுக்கான பட்டியலை மேலிடத்திற்கு அனுப்பும்போது அந்த ஜமாஅத்தில் விதிமுறைகளுக்கேற்ப ஓட்டுரிமை பெற்றவர்கள் எத்தனை பேர் இருக்கின்றனர்? அவர்களில் எத்தனை பேர் தேர்தலில் கலந்து கொண்டனர் என்பதை தெளிவாகக் குறிப்பிட வேண்டும்.

**விதிமுறை எண்: 353:** தேர்தல் பட்டியலில் தேர்தல் கூட்டத் தலைவரின் கையொப்பத்துடன் எந்த பொறுப்புக்காகவும் முன்மொழியப்படாத, அதே நேரத்தில் தேர்தலில் கலந்துகொண்ட இரண்டு நபர்களின் கையொப்பமும் கட்டாயமாகும்.

**விதிமுறை எண் 371:** ஹஸ்ரத் கலீஃபத்துல் மஸீஹ் தாம் இல்லாதபோது எப்போதாவது நியமிக்கும் காதியான் அமீர் உட்பட, எல்லா உள்ளூர் பொறுப்பாளர்களும், அமீர்மார்களும் தத்தமது வட்டத்தில் சத்ர் அஞ்சுமன் அஹ்மதிய்யாவின் நாஸிர்மார்களின் வழிகாட்டல்கள், கண்காணிப்பின் கீழ் இருப்பார்கள். மேலும் ஒவ்வொரு நாஸிருக்கும் ஒவ்வோர் உள்ளூர் ஜமாஅத்தின் அனைத்து பதிவேடுகளையும் பார்க்கின்ற, சோதிக்கின்ற உரிமை உண்டு. மேலும் தேவைப்படும் நேரத்தில் எந்தவொரு பதிவேட்டையும் காதியானுக்கோ அல்லது வேறு ஏதாவது இடத்திற்கோ வரவழைத்து பரிசீலனை செய்யும் உரிமையும் உண்டு.

**விதிமுறை எண் 373:** உள்ளூர் ஜமாஅத்தின் உறுப்பினர்களுக்கு உள்ளூர் அமீரின் தீர்ப்பு அல்லது கட்டளை அல்லது நடவடிக்கைக்கு எதிராக ஏதாவது முறையீடு இருக்கிறதென்றால் அவர்கள் தமது கோரிக்கையை மேலிடத்திற்கு எடுத்து வைக்கும் உரிமை

அவர்களுக்கு உண்டு. மேலும் மேலிடத்தின் தீர்ப்பின்படி செயல்படுவது உள்ளூர் அமீர் மற்றும் ஜமாஅத்தின் உள்ளூர் உறுப்பினர்களுக்கு அவசியமாகும். உள்ளூர் அமீரின் தீர்ப்பு அல்லது கட்டளைக்கு எதிராக மேலிடத்திடம் எடுத்து வைக்கப்படும் கோரிக்கை உள்ளூர் அமீர் மூலமாக எடுத்து வைக்கப்படும். மேலும் உள்ளூர் அமீர் 7 நாட்களுக்குள் அப்படிப்பட்ட கோரிக்கையை தனது கருத்துடன் மேலிடத்திற்கு அனுப்புவது அவருக்கு கடமையாகும். கோரிக்கைக்கு தீர்ப்பு கிடைக்கும் வரை விண்ணப்பிக்கப்பட்ட (அமீரின்) கட்டளையின்படி செயல்படுவது கட்டாயமானதாகும். ஆனால் இறுதி தீர்ப்புக்கு முன்னரும் கோரிக்கை வைக்கப்பட்ட விஷயத்தை செயல்படுத்துவதிலிருந்து தடுக்கும் உரிமை மேலிடத்திற்கு இருக்கிறது.

**விதிமுறை எண் 374:**

A. உள்ளூர் அமீர் உள்ளூர் ஜமாஅத்திற்கு இறுதி பொறுப்பாளியாவார். எனவே கருத்து வேறுபாடு உருவாகும் நிலையில் ஒரு விஷயத்தை ஜமாஅத்தின் பயன், நஷ்டம் மற்றும் அமைதிக்கும் கட்டமைப்பிற்கும் இடையூறாக அவர் கருதும் நேரத்தில் அவர் தனது அதிகாரத்தினால் பெரும்பான்மையான கருத்தை மறுத்து விடும் உரிமை அமீருக்கு உண்டு. ஆனால் அத்தகைய சூழ்நிலையில், ஜமாஅத்தின் ஒரு சொத்தாக கருதப்படுகின்ற ஒரு பதிவேட்டில் முறைப்படி தனது கருத்து வேறுபாட்டிற்கான காரணங்களை எழுத்தில் கொண்டு வர வேண்டியது உள்ளூர் அமீரின் கடமையாகும். அல்லது அந்த காரணங்களை பதிவேட்டில் எழுதுவது ஜமாஅத்தின் பயனுக்கு மாற்றமானதாக அவர் கருதினால், நான் இந்த காரணங்களின் அடிப்படையில் - அதை இங்கு குறிப்பிடுவது ஜமாஅத்தின் பயனுக்கு எதிரானது -

பெரும்பாலான கருத்துக்கு மாற்றமாக தீர்மானிக்கிறேன் என்ற குறிப்பை குறைந்தது எழுத வேண்டும்.

B. இரண்டாவதாகக் குறிப்பிடப்பட்ட சூழ்நிலையில் (அதாவது பெரும்பான்மையான கருத்து ஜமாஅத்தின் பயனுக்கு ஏற்புடையதன்று என்ற உள்ளூர் அமீரின் சொந்த கருத்து) அவர் தமது கருத்து வேறுபாட்டிற்கான காரணங்களை எழுதி இரகசியமான முறையில் மேலிடத்திற்கு அனுப்பி வைக்க வேண்டும். அப்படிப்பட்ட அறிக்கையை ஒரு வாரத்திற்குள் அனுப்புவது அவசியமாகும். மேலும் அமீர் அறிக்கை தெரிவித்ததுமே தமது செயற்குழுவிடம், தாம் அப்படிப்பட்ட ஓர் அறிக்கையை கொடுத்து விட்டதாக எழுத்துப் பூர்வமாக அறிவிப்பது அமீரின் கடமையாகும்.

**விதிமுறை எண் 376:** ஒவ்வோர் உள்ளூர் அமைப்பு அல்லது ஹல்கா (வட்ட) அமைப்பு அல்லது மண்டல அமைப்பு அல்லது மாநில அமைப்பு அல்லது நாட்டின் அமைப்பு மேலிட அமைப்பின் எந்தவொரு தீர்ப்புக்கு எதிராகவும் கலீஃபத்துல் மஸீஹ் அவர்களுக்கு முன்னால் மேல் முறையீடு செய்வதற்கு உரிமை உண்டு.

**விதிமுறை எண் 377:** ஜமாஅத்தின் ஒட்டுமொத்தமான பயனுக்கு தாக்கத்தை ஏற்படுத்த சாத்தியமிருக்கும் விஷயங்களில் உள்ளூர் அமீர்/தலைவர் உள்ளூர் கிளை அமைப்புகளுக்கு கட்டளையிட முடியும். அது எழுத்துப் பூர்வமாக இருக்க வேண்டும். மேலும் மேற்கூறப்பட்ட கிளை அமைப்புகள் அந்தக் கட்டளையை பொருத்தமற்றதாகக் கருதினால் அது தனது மேலிடத்தின் மஜ்லிஸ் மூலமாக சத்ர் அஞ்சுமன் அஹ்மதிய்யாவின் பக்கம் திரும்ப வேண்டும்.

**********

## ஜமாஅத் அமீர்மார்கள் மற்றும் தலைவர்களின் கடமைகளும் அதிகாரங்களும்

ஜமாஅத்தில் அன்பு, நேசம், ஒற்றுமை, சகோதரத்துவம் ஆகியவற்றின் சூழலை உருவாக்குவது ஜமாஅத் அமீர்/தலைவர் ஆகியோரின் முக்கியமான பொறுப்பாகும். ஜமாஅத் பொறுப்பாளர்களின் பணிகளை கண்காணிப்பது, வழிநடத்துவது மட்டுமின்றி ஒவ்வொரு மாதமும் ஒருமுறை செயற்குழுக் கூட்டத்தை அழைத்து மாதாந்திர செயல்களைப் பற்றி ஆய்வு செய்வதும் அமீர் மற்றும் தலைவரின் பொறுப்பாகும். ஜமாஅத்தில் ஆண்கள், பெண்கள், குழந்தைகள் ஆகியவர்கள் அனைவரையும் சேர்த்து மொத்தம் எத்தனை உறுப்பினர்கள் இருக்கின்றனர் என்பது பற்றி ஜமாஅத் அமீர் மற்றும் தலைவருக்கு தெரிந்திருக்க வேண்டும். மேலும் அவர்களில் சந்தா கொடுப்பவர்கள் எத்தனை பேர்? சந்தா கொடுக்காதவர்கள் எத்தனை பேர்? வேலை செய்பவர்கள் எத்தனை பேர்? வேலையற்று இருப்பவர்கள் எத்தனை பேர்? மேலும் தொழுகையாளிகள் எத்தனை பேர்? ஜமாஅத் அமைப்புடன் தொடர்பு கொண்டிருப்பவர்கள் எத்தனை பேர்? என்பதும் தெரிந்திருக்க வேண்டும். எவராவது இந்த விவகாரங்களில் பலவீனமாக இருக்கிறார்கள் என்றால் அவர்களை அடையாளமிட்டுக் காட்டி அவர்களை சீர்திருத்தம் செய்யும் நடவடிக்கையின் பக்கம் கவனம் செலுத்துவது ஆகிய இவ்வனைத்து விஷயங்களும் அமீர் மற்றும் தலைவரின் பொறுப்பின் கீழ் வருகின்றன. இந்த விஷயங்களில் சம்பந்தப்பட்ட பொறுப்பாளர்களிடம் ஒத்துழைப்பைப் பெறுவது அவசியமாகும். இது தொடர்பாக கீழ்வரும் விதிமுறைகளை கவனத்தில் கொள்ளுங்கள்:

(1) விதிமுறை எண் 366: அமீர் அல்லது தலைவர், உள்ளூர் அமீர் அல்லது தலைவரின் கடமை, கிலாஃபத்தின் பிரதிநிதி என்ற முறையில் தனது ஹல்காவிலுள்ள

(வட்டத்தியிலுள்ள) அஹ்மதி உறுப்பினர்களின் ஆன்மீகம், நல்லொழுக்கம், செயல்பாடு, தப்லீக், பொருளாதாரம், நாகரிகம்,பௌதீகம் ஆகியவற்றின் வளர்ச்சிக்காக முடிந்த அளவுக்கு முயற்சி செய்து கொண்டிருப்பதும், ஜமாஅத்தை நிலைநாட்டுவது, உறுதிப்படுத்துவது, முன்னேற்றத்திற்கான திட்டங்களைப் பற்றி சிந்தித்து அவற்றின்படி செயல்படுவது ஆகியவையாகும்.

(2) **விதிமுறை எண் 367:** அமீர்மார்கள் (அல்லது தலைவர்) உள்ளூர் ஜமாஅத்தின் கடைசி பொறுப்பாளராக திகழ்கின்றார். எனவே அவர் தமது இடத்தில் ஒரு நல்ல முன்மாதிரியாக ஆகுவதற்கு முயற்சி செய்வது அவசியமாகும். மேலும் அவருக்குக் கட்டுப்படுவது மக்களின் உள்ளங்களில் தாமாகவே அன்பு மற்றும் கண்ணியத்துடன் நிலைபெறுவதற்காக அவர் தமது நடத்தையை அநுதாபமுள்ளதாகவும், பரிவுள்ளதாகவும், நீதியுள்ளதாகவும் வைக்க வேண்டியது வரும். மேலும் கருத்து வேறுபாடுகள் ஏற்படும்போது அவர் எந்த பிரிவின் பக்கமும் பாரபட்சமானவராகக் கருதப்படக் கூடாது.

(3) **விதிமுறை எண் 368:** உள்ளூர் அமீர்/தலைவர் எல்லா முக்கியமான விஷயங்களிலும் ஜமாஅத் உறுப்பினர்களின் ஆலோசனையைப் பெற வேண்டியது அவசியமாகும். மேலும் அவர் பொதுவாக பெரும்பான்மையான கருத்துக்கு கண்ணியமளிக்க வேண்டும். சின்னச் சின்ன கருத்து வேறுபாடுகளை அடிப்படையாகக் கொண்டு பெரும்பாலான கருத்துக்கு எதிராக காலெடுத்து வைக்கக் கூடாது. மாறாக, அமீர் அல்லது தலைவர் ஆலோசனைகளின்போது முடிந்தவரை தீர்ப்புகள் ஒன்றுபட்ட கருத்தின்படி ஏற்படும் வகையில் செயல்பட வேண்டும்.

**அமீர்மார்கள், தலைவர்களின் அதிகாரங்கள் மற்றும் அவர்களின் அந்தஸ்து பற்றிய தெளிவு**

(4) **விதிமுறை எண்** 369: உள்ளூர் அமீர் மற்றும் தலைவர் ஆகியோருக்கு இடையில் அதிகாரத்தைப் பொருத்த வரையிலான வித்தியாசம் என்னவென்றால், உள்ளூர் அமீர் எல்லா நிலையிலும் உள்ளூர் பொறுப்பாளர்களின் தீர்ப்புகளுக்குக் கட்டுப்படுவது அவசியமில்லை. அதாவது விதிவிலக்கான நிலைமையில் ஜமாஅத்தின் பயனுக்காக அவர் தனது காரணங்களை எழுத்துப்பூர்வமாக எடுத்து வைத்து உள்ளூர் செயற்குழுவின் தீர்ப்பை ரத்து செய்யும் அதிகாரம் பெற்றிருக்கிறார். ஆனால் தலைவர் எந்நிலையிலும் செயற்குழுவின் தீர்மானங்களுக்குக் கட்டுப்பட்டவராவார். ஆயினும் அமீர்/தலைவர் இருவரும் மேலிடத்தின் அதிகாரிகளுடைய வழிகாட்டலுக்குக் கட்டுப்பட்டவராவர்.

(5) **விதிமுறை எண்** 370: செயற்குழுவிற்கு எந்தவொரு தண்டனை நடவடிக்கையும் எடுக்க அதிகாரமில்லை. ஆயினும் ஜமாஅத்தின் ஓர் உறுப்பினர் ஜமாஅத் அமைப்புக்கு மாற்றமாக நடந்து கொள்கின்றார் என்றால் அவரை சீர்திருத்தும் நடவடிக்கையை மேற்கொள்ள செயற்குழுவிற்கு அதிகாரம் உண்டு. சீர்திருத்த நடவடிக்கையிலும் வெற்றி பெற முடியவில்லை என்றால் மேலிடத்திற்கு அறிக்கை கொடுக்க வேண்டும். செயற்குழு கஸா துறையின் அந்தஸ்தில் எந்தத் தீர்ப்பையும் கொடுக்க அதிகாரமில்லை.

(6) **விதிமுறை எண்** 303: மேலிடத்திலிருந்து ஒரு நாஸிர் சுற்றுப் பயணத்தில் வரும்போது கலீஃபத்துல் மஸீஹின் பிரதிநிதி என்ற முறையில் பொருத்தமான முறையில் கண்ணியத்துடன் அவருக்கு அவசியமான ஏற்பாடுகளை செய்வது ஒவ்வோர் உள்ளூர் ஜமாஅத்தின் கடமையாகும்.

(7) **விதிமுறை எண்** 305: எந்தவொரு ஜமாஅத்திலாவது எந்தவொரு துறையில் எந்தவொரு பொறுப்பாளரும் தேர்ந்தெடுக்கப்படாவிட்டால் அந்தத் துறையின் பணியின் பொறுப்பு தலைவர்/அமீர் மீது இருக்கும்.

**மாவட்ட அமாரத்துகள், அவற்றின் செயற்குழு உறுப்பினர்களுக்கான தேர்தல் விதிமுறைகள் மற்றும் 'சய்யிதுனா ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹ்) அவர்களின் வழிகாட்டல்கள், கட்டளைகள்**

இந்தியாவில் முன்னர் மாநில அமாரத்துகள் நிலைபெற்றிருந்தன. பிறகு அது மண்டல அமைப்பாக மாற்றப்பட்டது. 2013-ஆம் ஆண்டிலிருந்து ஹுஸூர் அவர்கள் மாவட்ட அமைப்பை நிலைநாட்டுமாறு கட்டளையிட்டார்கள். எந்த மாவட்டங்களில் 5 அல்லது அதை விட அதிகமான ஜமாஅத்துகள் இருக்கின்றனவோ அங்கு மாவட்ட அமாரத்திற்கான அமைப்பை நிலைநாட்டுவதற்கு ஒப்புதல் வழங்கினார்கள்.

அதன்படி தற்போது அல்லாஹ்வின் அருளால் 113 மாவட்ட அமாரத்துகள் நிலைபெற்றுள்ளன.

மாவட்ட அமாரத்திற்கான தேர்தல்/நியமனம் மற்றும் அதன் செயற்குழுவிற்கான நியமனம் ஆகியவற்றிற்கான வழிகாட்டல்கள் கீழே தரப்படுகின்றன:

**விதிமுறை எண் 296:** ஒன்றுக்கு அதிகமான இடங்களிலுள்ள உள்ளூர் ஜமாஅத்துகளை இணைத்து ஹல்காவாக (வட்டமாக) அல்லது மாவட்டமாக அல்லது ஜமாஅத்துகளுக்கான அமைப்பாக நிலைநாட்டுவது ஆகுமானதாகும். அத்தகைய நிலையில் அவற்றில் ஒவ்வோர் அமைப்பும் தமக்கு மேல்மட்டத்திலுள்ள அமைப்பின் கீழ் இருக்கும். மேலும் இந்த எல்லா அமைப்புகளும் மேலிட அமைப்பின் கீழ் இருக்கும்.

**விதிமுறை எண் 298:** வட்ட அளவிலுள்ள அமாரத்திற்கான வரையறையை நிலைமைகளுக்கேற்ப நாஸிர் அஃலா நியமிப்பார். அது குறைந்தது 5 ஜமாஅத்துகளைக் கொண்டதாக இருக்கும்.

*குறிப்பு:* மேலே குறிப்பிட்டதைப் போன்று

இந்தியாவில் எந்த மாவட்டங்களில் 5 அல்லது அதை விட அதிகமான ஜமாஅத்துகள் இருக்கின்றனவோ அங்கு மாவட்ட அமாரத்துக்கான அமைப்பை நிலைநாட்ட ஹுஸூர் அவர்கள் ஒப்புதல் வழங்கியிருக்கிறார்கள்.

**மாவட்ட அமீர் தேர்தலுக்கான விதிமுறைகள்:**

1. மாவட்ட அமீரின் தேர்தல் எல்லா ஜமாஅத்துகளின் அமீர்மார்கள் மற்றும் தலைவர்கள் மூலமாக நடைபெறும். அந்த மாவட்டத்தைச் சேர்ந்த எந்த ஜமாஅத்தின் நபருடைய பெயரும் - அவர் முறைப்படி சந்தா கொடுப்பவராகவும், பாக்கி இல்லாதவருமாக இருந்தால்- மாவட்ட அமீருக்காக முன்மொழியப்படலாம். அதாவது விதிமுறை எண் 329-ன் நிபந்தனைகளை அவர் நிறைவேற்றுபவராக இருப்பார் என்றால் அவர் பெயர் முன்மொழியப்படலாம்.

2. தேர்தல் நிகழ்ச்சியில் உள்ளூர் அமீர்/தலைவர், தாமே கலந்து கொள்கின்றார் என்றால் சரி. இல்லையென்றால் அவர்களுடைய பிரதிநிதிகள் தேர்தலில் கலந்து கொள்ள முடியாது.

3. மாவட்ட அமீருக்கான தேர்தலுக்குரிய அதம எண்ணிக்கை (Quorum) பாதியை விடக் குறைவாக இருக்கக் கூடாது. அது முதலாவதாக கூட்டப்பட்டதாக இருந்தாலும் சரி அல்லது இரண்டாவதாக கூட்டப்பட்டதாக இருந்தாலும் சரி. அதாவது 10 ஜமாஅத்துகள் இருக்கின்றனவென்றால் குறைந்தபட்சம் 5 ஜமாஅத்துகளின் அமீர்மார்கள், தலைவர்கள் தேர்தலின்போது வருகை தருவது அவசியமாகும்.

கட்டாய சூழ்நிலையினாலன்றி எந்தவொரு ஜமாஅத்தின் அமீர்/தலைவர் வருகை தராமல் இருக்காத அளவுக்கு முயற்சி செய்யுங்கள்.

4. மாவட்ட அமீருக்காக குறைந்தது 4 பெயர்கள் முன்மொழியப்படுவது அவசியமாகும்.

5. ஒவ்வோர் உறுப்பினரும் 3 ஓட்டுகள் போட வேண்டியது கட்டாயமாகும். ஒவ்வொரு நபரும் 3 பெயரை

முன்மொழியலாம். அதாவது (தேவைப்படும்போது ஓர் உறுப்பினர் ஒன்றை விட அதிகமான பெயரை முன்மொழியலாம். மேலும் ஒன்றை விட அதிகமான பெயருக்கு வழிமொழியலாம்.)

6. முன்மொழியப்படும் ஒவ்வொருவருடைய பெயர், பைஅத் செய்த ஆண்டு, கல்வித் தகுதி, வயது, தொழில், இதற்கு முன்னர் ஜமாஅத்திற்கு செய்த தொண்டுகள் ஆகியவற்றை குறிப்பிடவும்.

7. ஒவ்வொருவரின் பெயருக்கு முன்பும் அவர் பெற்ற ஓட்டுகளை விபரமாக குறிப்பிடவும்.

8. எவருடைய பெயர் மாவட்ட அமீருக்காக முன்மொழியப்பட முடியாதோ அவர் மாவட்ட அமீருக்கான தேர்தலுக்கு தலைமை வகிக்கட்டும். அல்லது முரப்பிகளை தேர்தல் கூட்டத்திற்கு தலைமை வகிக்க வையுங்கள். ஆயினும் நாஸிர் அஃலா காதியான் அவர்களிடமிருந்து மாவட்ட அமீர்மார்களுக்கான தேர்தலுக்காக மேலிடத்தின் பிரதிநிதி நியமிக்கப்பட்டு தகவல் தெரிவிக்கப்படும். அவரே தனது கண்காணிப்பிலும் தலைமையிலும் தேர்தலை நடத்துவார்.

9. மாவட்ட துணை அமீர்கள் நியமனம் தொடர்பாக ஹுஸூர் அவர்களிடமிருந்து கிடைக்கப்பெற்ற வழிகாட்டல் என்னவென்றால், ‘‘இந்தியாவில் எங்கெல்லாம் மாவட்ட அமீர்கள் நியமிக்கப்பட்டுள்ளார்களோ அங்கு ஆய்வு செய்து அவர்களுக்கு ஒரு துணை அமீரையோ அல்லது தேவைக்கேற்ப இரண்டு துணை அமீர்களையோ நியமிப்பதற்கான நடவடிக்கை எடுக்க வேண்டும்.’’

*(கடித எண் WTT 4856/16-6-2016)*

10. மாவட்ட அமீர்களுக்கான தேர்தல் அறிக்கை மற்றும் மாவட்ட துணை அமீர்களின் நியமன அறிக்கை ஹஸ்ரத் கலீஃபத்துல் மஸீஹ் அவர்களிடம் சமர்ப்பிக்கப்பட்டு ஒப்புதல்/வழிகாட்டல் பெறப்பட்டு தகவல் அளிக்கப்படும்.

**மாவட்ட செயற்குழுக் கூட்டத்திற்கான விதிமுறைகள்:**

**விதிமுறை எண் 360 A**: மாவட்ட அமீர் தனது உதவிக்காக மாவட்ட செயற்குழுக் கூட்டத்தை நியமித்து நஸாரத் உல்யாவிடமிருந்து ஒப்புதல் வாங்குவதற்கு அவருக்கு அதிகாரம் உண்டு.

B. மாவட்ட செயற்குழுக் கூட்டம் மாவட்ட துணை அமீர்மார்கள், அவர்களின் பொறுப்பாளர்கள் ஆகியோரைக் கொண்டதாக இருக்கும். அவர்களை பல்வேறு மேலிட துறைகளின் கடமைகளை நிறைவேற்றுவதற்காக மாவட்ட அமீர் தேர்தெடுப்பார். மேலும் அவர்கள் தமது துறையின் மாவட்ட செயலர்கள் என அழைக்கப்படுவர்.

அவ்வாறே மாவட்ட நாஸிம் அன்சாருல்லாஹ், மாவட்ட குத்தாமுல் அஹ்மதிய்யா காயிது, மாவட்ட முபல்லிக் ஆகியோரும் செயற்குழுவின் உறுப்பினர்களாவர்.

C. விதிமுறை எண் 329-ன் படி ஓட்டளிப்பதற்கும், பதவியை பெறுவதற்கும் தகுதியுடைய அத்தகையவர்களையே மாவட்ட அமீர் தனது செயற்குழுவிற்காக பெயரைத் தேர்ந்தெடுக்க வேண்டும். (Nomination செய்ய வேண்டும்).

*(முக்கியக் குறிப்பு:* முன்னர் குறிப்பிட்டது போன்று சய்யிதுனா ஹுஸூர் அன்வர் அய்யதஹுல்லாஹுத் தஆலா அவர்கள் காதியானில் ஒரு மர்கஸீ இன்திகாபீ கமிட்டி (மேலிட தேர்தல் குழு)வை நியமித்திருக்கிறார்கள். மாவட்ட அமீர்மார்களிடமிருந்து மாவட்ட செயற்குழுவிற்காக என்ன பெயர்கள் தேர்ந்தெடுத்து அனுப்பப்படுமோ அவர்களைப் பற்றி நஸாரத் உல்யா, நஸாரத் பைத்துல் மால் ஆமது, நஸாரத் உமூரே ஆம்மா ஆகியவற்றிடமிருந்து Clearance வாங்கிய பிறகு மர்கஸீ இன்திகாபீ கமிட்டி (மேலிட தேர்தல் குழு)யிடம் எடுத்து வைக்கும். மேலும் மேலிட தேர்தல் குழுவே மாவட்ட செயற்குழுவிற்கான ஒப்புதலை வழங்கும்.)

★ மாவட்ட செயற்குழுவிற்காக கீழ்வரும் விபரப்படி 13 செயலர்களின் பெயர் குறிப்பிடப்படுகின்றன:

மாவட்டத்தில் ஜமாஅத்துகளின் எண்ணிக்கை 10க்குக் குறைவாக இருக்குமென்றால் உறுப்பினர்களின் எண்ணிக்கையும் அதிகமாக இல்லாவிட்டால் முதலிலுள்ள 5 பொறுப்புகளுக்காவும், எஞ்சிய 8 பொறுப்புகளில் அங்குள்ள நிலைமைகளுக்கேற்ப தேவையுடைய 2 பொறுப்புகள் ஆகிய மொத்தம் 7 பொறுப்புகளுக்காக மாவட்ட செயலர்களின் பெயர் தேர்ந்தெடுத்து அனுப்பவும்.

மேலும் எந்த மாவட்டத்தில் ஜமாஅத்துகளின் எண்ணிக்கை 10க்கு அதிகமாக இருக்குமோ அங்கு கீழ்வரும் 13 பொறுப்புகளுக்கும் மாவட்ட செயலர்களின் பெயர் தேர்ந்தெடுத்து அனுப்பவும்.

மேலிட தேர்தல் குழு ஆய்வு செய்து யாராவது ஒருவருடைய பெயருக்கு ஒப்புதல் வழங்கும் வகையில் ஒவ்வொரு பொறுப்புக்கும் இரண்டிரண்டு பெயர்களை தேர்ந்தெடுப்பது பொருத்தமாகும்.

1. மாவட்ட இஸ்லாஹோ இர்ஷாது செயலர்
2. மாவட்ட தஃஃவத்தே இலல்லாஹ் செயலர்
3. மாவட்ட தஃஃலீமுல் குர்ஆன் வக்ஃஃபே ஆர்ஸீ செயலர்
4. மாவட்ட இஷாஅத் மற்றும் MTA செயலர்
5. மாவட்ட பொருளாளர்
6. மாவட்ட கல்விச் செயலர்
7. மாவட்ட வக்ஃஃபே நவ் செயலர்
8. மாவட்ட உமூரே ஆம்மா காரிஜா செயலர்
9. மாவட்ட வஸிய்யத் செயலர்
10. மாவட்ட சொத்து செயலர்
11. மாவட்ட தஹ்ரீகே ஜதீது செயலர்
12. மாவட்ட வக்ஃஃபே ஜதீது செயலர்
13. மாவட்ட ரிஷ்தா வ நாத்தா செயலர்